| | | | | |
|---|---|---|---|---|
| sthalam | **kOyil (thillai - cidhambaram)** | pAdal | **thiru~nAvukkarasar** | |
| paN: | **thirukkuRu~ndhogai** | rAgam: | | |
| thirumuRai # | **5.1.1 - 5.1.11** | pAdal | **annam pAlikkum, etc.** | # 5229 - 5239 |

**ஐந்தாம் திருமுறை பதிக உரை விளக்கம்**

திருநாவுக்கரசு சுவாமிகள் தில்லையில் (சிதம்பரத்தில்) பாடியருளிய கீழ்க்கண்ட பதிகம் அடியார்களுக்கு அமுது படைக்கும் (மாகேச்வர பூசை) காலங்களில் ஓதப்பட்டு வருகிறது. இல்லறத்தார், துறவிகள் ஆகிய யாவராலும் பாராயணம் செய்யப்பட வேண்டிய பதிகம். எவ்விதத்திலாவது உணவும், போக வாழ்வும் கிடைக்கச் செய்யும் அதி அற்புதப் பதிகமாகும். அவரவர் அனுபவத்தால் அறியலாம்.
(தமிழ் வேதம் - சைவ சமயத் திங்களிதழ்)
கு.முருகேச பிள்ளை

திருச்சிற்றம்பலம்

**1. அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்**
**பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை**
**என்னம் பாலிக்கு மாறு கண்டின்புற**
**இன்னம் பாலிக்குமோ யிப்பிறவியே.**

( அன்னம்=முத்திப்பேறு, பொன்னம்=பொன்னுலகு, என்னம்=என் அன்பு, ஆலித்தல்=பெருக்குதல், பாலித்தல்=கொடுத்தல்)

முத்திப்பேற்றை அளிக்கும் தில்லைச் சிற்றம்பலம் (சிதம்பரம்) பொன்னுலகு வாழ்வையும் தரும். அத்தகைய சிற்றம்பலத்தை அன்பினால் வணங்கி, பரமுத்திப் பேரின்ப நிலையை அடைதற்கு இந்த மானிடப்பிறவியை இன்னும் சிவ பரம்பொருள் கொடுப்பாராக.

**2. அரும்பற்றப்பட ஆய்மலர் கொண்டு நீர்**
**சுரும்பற்றப்படத் தூவித் தொழுமினோ**
**கரும்பற்றச் சிலைக் காமனைக் காய்ந்தவன்**
**பெரும்பற்றப் புலியூர் எம் பிரானையே.**

( அற்றப்பட = நீக்கம் செய்ய, ஆய்மலர்=ஆராய்ந்த நல்லமலர், சுரும்பு=வண்டு, சிலை=வில், அற்றச்சிலை=அழிவு அழித்த சிலை (வில்), பிரான்=தலைவர்)

அரும்புகளை நீக்கி, வண்டு போன்றவற்றை நீக்கி ஆய்ந்த ( தூய ) மலர்களைத் தூவி, கரும்பு வில்லை ஏந்திய காமனை எரித்த பெரும்பற்றப்புலியூர் நம் பிரானை வணங்குங்கள் .

**3. அரிச்சுற்ற வினையால் அடர்ப்புண்டு நீர்**
**எரிச்சுற்றக் கிடந்தார் என்ற யலவர்**

**சிரிச்சுற்றுப் பல பேசப்படா முனம்**
**திருச்சிற்றம்பலஞ் சென்றடைந்துய்ம்மினே.**

(அரிச்சுற்ற=தாக்குதலையுடைய, எரிச்சுற்ற=தீ சூழ, அயலவர்=மற்றவர்கள்)

துன்பம் தரக்கூடிய இரு வினையால் தாக்கப்பட்டு இடுகாட்டில் தீயிலிடப்பட்டு மறைந்தார் என்று அயலவர் பேசாத முன்னமே திருச்சிற்றம்பலத்தைச் ( சிதம்பரம்) சென்றடைந்து நலம் பெறுங்கள்.

4. **அல்லல் என் செய்யும் அருவினை என் செயும்**
**தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என் செய்யும்**
**தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்கு**
**எல்லை யில்லதோர் அடிமை பூண்டேனுக்கே**

( அல்லல்=வருவினை, அருவினை=நுகர்வினை, தொல்லை வல்வினை=பழைய வினை)

வருவினை(ஆகாமியம்) , நுகர்வினை(பிராரத்தம்) , பழையவினை (சஞ்சிதம்) ஆகிய யாவும் என்னை ஒன்றும் செய்ய முடியாது. ஏன் ? தில்லை மாநகரில் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமானுக்கு மீளா அடிமை பூண்டவன் நான். ( சிறு தெய்வ வழிபாட்டினால் வினைகளைப் போக்க முடியாது என்று உணர்தல் வேண்டும் ).

5. **ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெல்லாம்**
**நான் நிலாவி இருப்பன் என் நாதனைத்**
**தேன் நிலாவிய சிற்றம்பலவனார்**
**வான் நிலாவி இருக்கவும் வைப்பரே**

(ஊன்=உடல், நிலாவி=விளங்கி, கலந்து)

என் உடம்பில் உயிர் உள்ளவரை எனது தலைவராகிய சிற்றம்பலவனாரைத் தொழுது நிற்பேன். பேரின்பம் அளிக்கும் ( முத்திப்பேறு) அந்த பரம் பொருள் ( நடராசப் பெருமான்) எளியேனுக்கும் பிறவாநிலையை அளித்துக் காப்பார்.

6. **சிட்டர் வானவர் சென்று வரங்கொளும்**
**சிட்டர் வாழ் தில்லைச் சிற்றம்பலத்துறை**
**சிட்டன் சேவடி கை தொழச் செல்லும் அச்**
**சிட்டர்பால் அணுகான் செறு காலனே**

(சிட்டர்=ஞானிகள், வானவர்=தேவர்கள், சிட்டன்=ஞானமா நடராசப் பெருமான், செறுதல்=தண்டித்தல், காலன்=கூற்றுவன்)

ஞானிகளும், தேவர்களும் சென்று வணங்கி வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள்ளும் பெருமையுடையது தில்லைச் சிற்றம்பலம். அத்தலத்தில்

ஞானிகள் பலர் வாழ்கின்றார்கள். அத்தகைய பெருமையுடைய சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானை வணங்கும் அடியார்களிடம் எமன் செல்ல மாட்டான்.

**7. ஒருத்தனார் உலகங்கட் கொரு சுடர்**
**திருத்தனார் தில்லைச் சிற்றம்பலவனார்**
**விருத்தனார் இளையார் விடமுண்ட எம்**
**அருத்தனார் அடியாரை யறிவரே**

(ஒருத்தனார்=உலகின் ஒரே தலைவர், சுடர்=ஒளி பொருந்தியவர், திருத்தன்=செம்பொருள், விருத்தனார்=முதியவர், அருத்தனார்=செம்பொருளானவர்)

எல்லா உலகங்கட்கும் முழுமுதற் பொருளானவர், ஒளிமயமானவர், செம்பொருளானவர், தில்லைச் சிற்றம்பலத்தில் கூத்தாடுபவர், முதியவர், மிக இளையவர், விடம் (நஞ்சு) உண்ட எம் செல்வர், அடியவரைத் தவறாமல் காப்பர்.

**8. விண் நிறைந்ததோர் வெவ்வழலின் உரு**
**எண் நிறைந்த இருவர்க்கு அறிவொணாக்**
**கண் நிறைந்த கடி பொழில் அம்பலத்**
**துள் நிறைந்து நின்றாடும் ஒருவனே.**

( விண்=ஆகாயம், வெவ்வழல்=சோதிப்பிழம்பு, எண்=செறுக்குற்ற, இருவர்=திருமால் – பிரம்மா, கண் நிறைந்த=கள் நிறைந்த, கடி=மணம், பொழில்=சோலை)

யான் எனது என்று செருக்குற்ற திருமாலும், பிரமனு அறியாத வண்ணம் சோதிப் பிழம்பாய் வானளாவி நின்ற சிவபெருமான், மணம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த தில்லைச் சிற்றம்பலத்தே நடமாடும் ஒப்பற்ற ஒருவராவார் ( அப்பெருமானுக்கு நிகர் அவரே ).

**9. வில்லை வட்டப்பட வாங்கி அவுணர் தம்**
**வல்லை வட்டம்மதில் மூன்றுடன் மாய்த்தவன்**
**தில்லை வட்டந்திசை கை தொழுவார் வினை**
**ஒல்லை வட்டங் கடந்தோடுதல் உண்மையே**

(வில்= மேருவாகிய வில், வட்டப்பட=வளைத்து, அவுணர்=திரிபுராதிகள், வல்=வலிமை, மதில்=கோடை, ஒல்லை=விரைவு, வட்டம்=சுற்றி)

மேருமலையை வில்லாக வளைத்துத் திரிபுர அசுரர்களின் மூன்று மதில்களையும் அழித்த பெருமான் எழுந்தருளியுள்ள தில்லை மாநகரின் திசையை நோக்கி வணங்கும் அன்பர்கள் செய்த வினைகள் யாவும் அவர்களை விட்டு விரைவாக ஓடிவிடும். இது உண்மை.

**10. நாடி நாரணன் நான்முகன் என்றிவர்**

**தேடியுந் திரிந்துங் காண வல்லரோ**
**மாட மாளிகை சூழ் தில்லை யம்பலத்**
**தாடி பாதம் என் நெஞ்சுள் இருக்கவே**

திருமாலும் பிரமனும் அகந்தை கொண்டு சிவ பரம்பொருளைப் பூமியில் தேடியும் வானத்தில் பறந்து திரிந்தும் காணமாட்டர் ஆயினர். மாட மாளிகைகள் சூழ்ந்த தில்லைச் சிற்றம்பலத்தே ஆடும் பெருமானின் திருவடி என் நெஞ்சினுள் விளங்கி நிற்கும்.

**11. மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்**
**சதுரன் சிற்றம்பலவன் திருமலை**
**அதிர ஆர்த்தெடுத்தான் முடி பத்து இற**
**மிதி கொள் சேவடி சென்றடைந்துய்மினே**

(மதுரம்=இனிமை, மங்கை=உமாதேவி, சதுரன்=அரியவர், திருமலை=கயிலை மலை, ஆர்த்து=ஆணவத்தால், மிதிகொள் சேவடி=மிதித்த சேவடி)

இனிய மொழி பேசும் உமையம்மை இடப்பாகத்தே கொண்ட பெருமான் மிக அருமைப்பாடுடையவர். கயிலை மலையை ஆணவத்தால் பெயர்த்தெடுத்த இராவணனுடைய பத்து முடிகளும் வருந்தும்படி மிதித்த திருவடிகளை உடைய பெருமானைச் சென்று வணங்குங்கள். நலம் பெறுவீர்கள் ( அன்றி வேறு வழி ஏதுமில்லை).

திருச்சிற்றம்பலம்
(தமிழ் வேதம் - சைவ சமய திங்களிதழ்)
கு.முருகேச பிள்ளை